

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தலில் இந்தியா கூட்டணியின் கழக வேட்பாளர் வி.சி.சந்திரகுமாரை ஆதரித்து ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி கோட்டை பகுதி, சின்னமுத்து வீதி 1,2,3, கிருஷ்ணசாமி வீதி, நடேசா மில் காம்பவுண்ட், பாலசுப்பிரமணியம் வீதி, முனிசிபல் காலனி, பிரபா தியேட்டர் ரோடு, சக்தி விநாயகர் கோயில், சத்யா வீதி, பவளம் வீதி, வைரம் வீதி, வேலுச்சாமி வீதி ஆகிய இடங்களில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். வாக்குச் சேகரிப்பில் மாநகரச் செயலாளர் மு.சுப்ரமணியம் கோட்டை பகுதி கழக செயலாளர் பொ.ராமச்சந்திரன் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

### திண்டிவனத்திற்கு வருகை தரும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு

# விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பான வரவேற்பு!

## மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

திண்டிவனம், ஜன. 22 - விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை தரும் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சிறப்பானவரவேற்பளிப்பது உள்ளிட்ட தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டம் திண்டி வனத்தில் உள்ளமாவட்ட தி.மு.க, அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்குவிழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவரும் ,செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கினார்.மாவட்டத் துணைச் செயலாளர்கள் மரக்காணம் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், அருணகிரி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் விழுப்புரம் மாவட்டத்தில் ஜனவரி 27, 28ஆகிய இரு தினங்களில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகளிலும், அரசு நிகழ்ச்சிகளில்தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கிறார் அந்த வகையில் ஜனவரி 27ஆம் தேதி மாலையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் சந்திப்பு கூட்டம் திண்டிவனத்தில் நடைபெறுகிறது.கூட்டத்தில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகிறார் . இதை தொடர்ந்து ஜனவரி 28ஆம் தேதி விழுப்புரத்தில் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழா பேருரை ஆற்றுகிறார். கட்சி நிகழ்ச்சி மற்றும் அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க

வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனம் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஹோட்டல் ஆரியாஸ் எதிரில் சிறப்பான வரவேற்பு அளிப்பது எனவும்,தொடர்ந்து ஹோட்டல் ஆரியாஸ்லிருந்துதிமுக நிர்வாகிகள் கூட்டம் நடைபெறும் ஜே.வி.எஸ் திருமண மறால் வரையில் சென்னை தேசிய நெடுஞ் சாலையின் இருபுறமும் தி.மு.க.வினர் கைகளில் இரு வண்ண கொடியினை ஏந்தி உற்சாக வரவேற்பு அளிக்க வேண்டும் என உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, ‘சேது நாதன்,தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா,செயற்குழு உறுப்பினர்கள்விஜயகுமார், சீனி ராஜ், பொதுக் குழு உறுப்பினர்கள்செல்வராஜ், மணிவண்ணன், கதிரேசன், வீடுர் ரவி, சாந்தி ஏழுமலை ,ஒன்றிய கழக செயலாளர்கள் சொக்கலிங்கம், அண்ணாதுரை, ராஜாராமன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன், துரை, இளம்வழுதி,பச்சையப்பன், விஜயராகவன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், பேரூர் செயலாளர் சம்பத்,திண்டிவனம் நகர அவைத் தலைவர் ஆர். ரவிச்சந்திரன்,செஞ்சி ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன்,மாவட்ட அணி அமைப்பாளர்கள்,எம். எல். பி .கோபிநாத், ராஜசக்தி,,கே செந்தில் குமார் , ப.செந்தில் குமார், டாக்டர்கள் அசோக், சக்தி பிரியன்,கோ. தமிழரசன்,திருமலை, ஊரல்அண்ணாதுரை, விஜயராகவன் ,சந்திரன்,செந்தில் முருகன், ரவிச்சந்திரன், ரோமியன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் டி .கே. பி ரமேஷ் எம். டி.பாபு,விஜயகுமார், அண்ணாமலை உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர ,பேரூர், கழக நிர்வாகிகள்,நகர மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் நன்றி கூறினார்.

### மணலூர்பேட்டை பேரூராட்சி அலுவலகம்

# ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டு விழா!

## மாவட்ட ஆட்சியர் வசந்தம் கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மணலூர்பேட்டை, ஜன. 22 - கள்ளக்குறிச்சி மாவட்டம், வாணாபுரம் வட்டம், மணலூர்பேட்டையில் புதிதாகக் கட்டப்படவுள்ள பேரூராட்சி அலுவலகக் கட்டடக் கட்டுமானப் பணிக்கான பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க. கார்த்திகேயன் ஆகியோர் நேற்று முன்தினம் (20.01.2025) தொடங்கி வைத்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசின் பல்வேறு துறைகளின் கீழ் புதிய கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு பல்வேறு துறைகளுக்கான கட்டிட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது, மேலும் பல்வேறு பழைய கட்டிடங்களின் புனரமைப்பு பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டு வருகிறது, அந்த வகையில் நேற்று முன்தினம் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர் பேட்டை முதல்நிலை பேரூராட்சிக்கு புதிய அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. அதன்படி மூலதன மானிய நிதித் திட்டத்தின்கீழ் ரூ.1.24 கோடி மதிப்பீட்டில் 294.14 ச.மீ. பரப்பளவில் மணலூர் பேட்டை பேரூராட்சி புதிய அலுவலகக் கட்டிடம் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளது.

இக்கட்டிடத்தின் தரைத்தளத்தில் போர்டிகோ, தலைவர் அறை, செயல் அலுவலர் அறை, பொறியாளர் அறை, கணினி அறை, பதிவறை, எழுத்தர் அறை மற்றும் காத்திருப்பு அறை ஆகிய அறைகளும், முதல் தளத்தில் மன்ற கூட்டரங்கு, தலைவர் அறை மற்றும் காத்திருப்பு அறை ஆகிய அறைகளும் கட்டப்படவுள்ளன. கட்டுமானப் பணிகளை தரமாகவும் விரைந்து முடித்திட வும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ். பிரசாந்த் மற்றும் எம். எல்.ஏ. வசந்தம் க.கார்த்திகேயன் தெரிவித்தனர்.




ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட, மாநகர இளைஞர் அணி சார்பில் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி ஆலோசனைப்படி மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் தலைமையில், மாநகர அமைப்பாளர் சேந்தபுகழன் முன்னிலையில் கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் கலந்து கொண்டு ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் இளைஞர் அணி சார்பில் தேர்தல் களபணிகள் ஆற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர இளைஞர் அணியினர் பலர் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டையில் ரூ.1.24 கோடி மதிப்பில் புதிதாகக் கட்டப்படவுள்ள பேரூராட்சி அலுவலகக் கட்டடக் கட்டுமானப் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் ஆகியோர் நேற்று முன்தினம் (20.01.2025) தொடங்கி வைத்தார்கள், இந்த நிகழ்வில் உள்ளாட்சி பிரதிநிதிகள், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டத்தில் பருவம் தவறிய மழையால் அறுவடைக்கு தயாரான சம்பா நெல் பயிர்கள் வயலிலேயே சாய்ந்து பாதிப்புகள் ஏற்பட்டது. செம்பனார்கோயில் ஒன்றியம் மேமாத்தூரில் பயிர் பாதிப்புகளை மயிலாடுதுறை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான சிவ.வீ.மெய்யாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்லம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி. மகாபாரதி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு. ஞானவேலன், எஸ். செல்லமணி, ஒன்றியக் கழக செயலாளர்கள் பி.எம். அன்பழகன், எம். அப்துல் மாலிக், ஏ.ஜி. ஜெ.பிரபாகர், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. தலைமை! சென்னை தென்மேற்கு மாவட்ட அவைத் தலைவர்

# மாம்பலம் ஆ.சந்திரசேகர் இல்லத் திருமணம்!

## கனிமொழி கருணாநிதி எம்.பி. - அமைச்சர் பெருமக்கள் வாழ்த்துகின்றனர்!

சென்னை, ஜன. 22 - சென்னை தென்மேற்கு மாவட்ட அவைத் தலைவர் மாம்பலம் ஆ.சந்திரசேகர் - ச.மாலா ஆகியோரின் மகன்வழி பேரனும் ஆ.ச. இராசேந்திரன் - இரா. இராதிகா ஆகி யோரின் புதல்வருமான இரா.இராசராசசோழனுக்கும், சென்னை இராயப் பேட்டை இ.கோபிநாத் - ஜி.யோகலட்சுமி ஆகியோரின் புதல்வி கோ.அனு அமிர்தாவுக்கும் மணவிழா 31.1.2025 - வெள்ளிக்



கிழமை காலை 7.30 மணியளவில் மயிலாப்பூர் டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலையில் ஏ.வி.எம்.இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவை கழக துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

இம்மணவிழாவிற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கே.ஏழுமலை, 'நந்தனம்' கி.மதி, மயிலை எஸ். முரளி, கோ.சு.மணி, எம். ஆறுமுகம், ராஜா அன்பழகன், மோனிஷா கருணாநிதி ஆகியோர் வரவேற்கின்றனர்.

அமைச்சர்கள் எ.வ. வேலு, மா.சுப்பிரமணியன், எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அன்பகம் கலை, பூச்சி முருகன் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் பலர் பங்கேற்கின்றனர்.

### தஞ்சை வடக்கு மாவட்டத்தில்

# மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தை சிறப்பாக கொண்டாடுவோம்!

## மாவட்ட மாணவர் அணி கூட்டத்தில் தீர்மானம்!

தஞ்சாவூர், ஜன. 22 - தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணியின் ஆலோசனைக் கூட்டம், கும்பகோணம், தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் க.செந்தில்குமார் தலைமையில் தலைமை வகித்தார். மாவட்ட துணை அமைப்பாளர்கள் ராஜேஷ், தேவராஜன், வினோத்குமார் மற்றும் கல்லூரி அமைப்பு நிர்வாகிகளும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நடைபெறும் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி 25.01.2025 சனிக்கிழமை காலை 10 மணி அளவில் மாவட்டக் கழக அலுவலகத்திலும், 10.30 மணியளவில் கும்பகோணம் மாநகர கழக அலுவலகத்திலும் நடத்துவது என்றும் தீர்மானிக்கப்படுகிறது.

25.01.2025 சனிக்கிழமை மாலை கும்பகோணம் சாரங்கபாணி சன்னதி தெருவில் தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நடைபெறும் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீர வணக்கம் நாள் பொதுக்கூட்டத்திற்கு கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி, மாவட்ட கழக செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, கழக வழக்கறிஞர் அணி துணை செயலாளர் சூரியா வெற்றிக்கொண்டான் மற்றும் கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் செ.ராமலிங்கம் மற்றும் கும்பகோணம் மாநக கழக செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றிய கழக செயலாளர்கள் வீர வணக்க உரையாற்றி, வீரவணக்கம் செலுத்த உள்ளதால் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழகங்களிலிருந்து கழக தோழர்கள், இளைஞர்கள், மாணவர்கள் திரளாக கலந்து கொள்ள இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

09.01.2025 சென்னையில் நடைபெற்ற மாநில மாணவர் அணி கூட்டத்தில் நிறைவேற்ற ப்பட்ட அனைத்து தீர்மானங்களையும் தஞ்சை வடக்கு மாவட்ட மாணவர் அணி வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

ஈரோடு இடைத்தேர்தலில் தலைமை கழகத்தின் மூலம் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்கு தேர்தல் பணியாற்ற ஒதுக்கப்படும் பகுதியில் மாணவர் அணிக்கு ஒதுக்கப்படும் இடத்தில் தேர்தல் கள பணியாற்றி கழக வேட்பாளர் வெற்றி பெறுவதற்கு அயராது உழைப்பது என்று இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது.

தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட பள்ளி கல்லூரிகளில் தமிழ் மாணவர் மன்றம் அமைப்பதற்கு கல்லூரி மாணவர்களுக்கு உறுதுணையாகவும், ஒத்துழைப்பாகவும் இருக்க வேண்டும் என்று முன்னாள் மாணவர்களையும், மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகளையும் இக்கூட்டத்தில் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

### மு.சண்முகம் எம்.பி. – கி.நடராசன் – கோ.சி. வள்ளுவன் – இரா.பொன்னுராம் பங்கேற்பு!

# தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகச்சாலை தொ.மு.ச. நிர்வாகிகள் கூட்டம்!

## டி.யு.சி.எஸ். சு.பத்மநாபன் அறிக்கை!

சென்னை, ஜன.22 - தமிழ்நாடு மாநில நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் தொழிலாளர் முன்னேற்ற சங்கம், மாநிலத்தில் உள்ள சங்கங்களின் நிர்வாகிகள் கூட்டம் ஜனவரி மாதம் 27.01.2025 காலை 09.30 மணியளவில் தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை அலுவலகமான கலைஞரகத்தில் நடை பெற உள்ளது.

தலைமை : து. பிச்சை, மாநிலத் தலைவர், முன்னிலை : சேலம் பொன்னி, இரா. பழனியப்பன், மாநிலப் பொருளாளர், சென்னை சிந்தாமணி. மரு.இரா. இராஜன், மாநில துணைத்தலைவர், வாழ்த்துரை : தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை பொதுச்செயலாளர் மு. சண்முகம், மாநிலங்களவை உறுப்பினர், கி. நடராஜன் தலைவர், தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவைத் தலைவர், கோ.சி. வள்ளுவன், இரா.பொன்னுராம், பேரவைதுணைத்தலைவர், அலுவலகச் செயலாளர், ஆ.சீ. அருணகிரி உழைப்பாளி துணை ஆசிரியர் அவர்கள் மற்றும் பேரவை அனைத்து நிர்வாகிகளும்.

1) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆசியுடன் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பாராட்டு தெரிவித்து, 2026 சட்டமன்ற தேர்தலில் மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைய பாடுபட வேண்டுதல்.

2) மொத்த விற்பனை பண்டக சாலைகள் பணியாளர்களின் ஊதிய உயர்வு ஒப்பந்தம் 31.03.2025 உடன் முடிவடைய உள்ள நிலையில் 01.04.2025 முதல் புதிய ஊதியத்திற்கான கோரிக்கைகள் தயார்படுத்துதல்.

3) சங்கத்தின் வளர்ச்சியை மேம்படுத்துதல் குறித்த ஆக்கப் பூர்வமான ஆலோசனைகள்.

4) சங்கங்களின் வருடாந்திர “இ” படிவம், இணைப்புக் கட்டணம் செலுத்துதல்.

5) தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் இதர அவசர அவசிய தீர்மா னங்கள். தாங்கள், தங்கள் சங்க நிர்வாகிகளுடன் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் மாநிலப் பொதுச் செயலாளர் சு.பத்மநாபன் கேட்டுக்கொண்டுள்ளார்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் மாவட்ட அவைத் தலைவரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் தலைமையில் நடைபெற்ற தி.மு.க. மாவட்ட அவசர செயற்குழு ஆலோசனைக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் சிறப்புரையாற்றினார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்டப் பொருளாளர் ரமணன், மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமார், அருணகிரிஉள்ளிட்ட தி,மு,க, நிர்வாகிகள் உள்ளனர்.